


27.06.2024

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நம் தேசத்தை மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மேம்படுத்த மத்திய அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

3. தமிழ்நாட்டில் நெசவாளர்களுக்கான அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என்று கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்.

4. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் கனமழை காரணமாக தென்மாவட்ட நீர்நிலைகளில் நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

5. உலககோப்பை 20-20 கிரிக்கெட் அரையிறுதி ஆட்டத்தில் கயானாவில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

□□□□□□□□

<u>குடியரசு தலைவர்</u>

நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், ஆளுமை பெறுவதன் மூலமே வளர்ந்த நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதிமுர்மு கூறியிருக்கிறார்.

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மத்திய அரசின் திட்டப்பயன்கள் அனைத்து தரப்பினரையும் சென்றடைவதே அரசின் நோக்கம் என்றார்

மத்தியில் ஆளும் தற்போதைய மத்திய அரசால்தான் தங்களது விருப்பங்களை பூர்த்திசெய்ய முடியும் என்று மக்கள் உணர்ந்திருப்பதாக அவர் கூறினார்.

புதிய அரசு வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தனது முதல் பொது பட்ஜெட்டை தாக்கல் செய்ய இருப்பதாக கூறிய அவர், தொலைநோக்குப் பார்வையுடனான கொள்கைகளும், சீர்த்திருத்தங்களும் இதில் இடம்பெறும் என்றார்.

கடந்த 10 ஆண்டு ஆட்சியில், 11-வது நிலையிலிருந்து, 5-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உயர்ந்ததாக கூறிய அவர், விரைவில் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை மேம்படுத்த மத்திய அரசு பணியாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டத்தின் கீழ் 70 வயதிற்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைக்கு வகை செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

போட்டித் தேர்வுகளில் வினாத்தாள்கள் கசிவது தொடர்பாக குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குறைந்த செலவிலான உபகரணங்களை மத்திய அரசு தயாரித்து வருவதாக அவர் கூறினார்.

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் விபத்தில் உயிரிழப்போர் மற்றும் ஆயுள் காப்பீடு திட்டங்களை விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் கூறினார்.

ஏழை எளிய மக்களின் வசதிக்காக சுகாதார கழிப்பிடங்கள் கட்டமைக்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் பாதுகாப்பு தளவாட வழித்தடம் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் குடியரசு தலைவர் தெரிவித்தார்.

குடியரசு தலைவர் உரையை தொடர்ந்து நாடாளுமன்ற இரு அவைகளும் நாளைவரை ஒத்திவைக்கப்பட்டன

முன்னதாக பிரதமர் திரு.நரேந்திரமாடி மத்திய அமைச்சர்களை மாநிலங்களவையில் இன்று அறிமுகம் செய்து வைத்தார்.

□□□□□□□□

## தமிழக சட்டப்பேரவை - முதலமைச்சர்

தமிழகத்தின் மிகப்பெரிய தொழில் நகரமான ஓசூரில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

சட்டப்பேரவையில் அவைவிதி 110-ன் கீழ் இன்று அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து பேசிய அவர் இதன்மூலம் கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி பெருகும் என்றார்.

2030-ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கை நோக்கி பல்வேறு முன்னெடுப்புகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மதுரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் போல திருச்சியிலும் உலகத்தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பெயரில் அமைக்கப்படும் என்றார்.

கோவையில் கலைஞர் பெயரில் நூலகம் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கு ஏற்ப அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும் கூறினார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

## உதயநிதி ஸ்டாலின்

ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள நீர் விளையாட்டு அரங்கில் விளையாட்டு வீரர்கள் உரிய பயிற்சி பெற்று பதக்கங்கள் வெல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பை இன்று தாக்கல் செய்த அவர், கிராமப்புற விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் மாவட்டங்களில் சர்வதேச விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் எலந்தப்பட்டி ஊராட்சியில் 50 ஏக்கர் பரப்பளவில் ஒலிம்பிக் விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என்றார்

முதலமைச்சர் கோப்பை போட்டிக்கான விண்ணப்பங்களை இணையதளம் மூலம் சமர்ப்பிப்பதற்கான வழிமுறைகள் எளிதாக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திருநங்கைகள் மற்றும் மகளிருக்கு 3 சக்கர வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறிய அவர், மகளிர் உரிமைத் திட்டத்திற்காக மேல்முறையீடு செய்தவர்களில், மேலும் 1 லட்சத்து 48 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து தமது துறை சார்ந்த அறிவிப்புகளை வெளியிட்டு பேசிய அவர் பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ள தமிழக வீர வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை 7 லட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

□□□□□□□□□

காந்தி

தமிழ்நாட்டில் மூவாயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்கப்படும் என்று கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் 10 சதவிகித அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என்றார்

2 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 10 புதிய கைத்தறி குழுமங்கள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்,

சின்னாளப்பட்டி செயற்கை பட்டு சேலைகள், கூறை நாடு சேலைகள், நாகர்கோவில் வேட்டிகள், உறையூர் சேலைகள், குடியாத்தம் லுங்கிகள் ஆகிய பாரம்பரியமிக்க கைத்தறி ரகங்களுக்கு புவிசார் குறியீடு பெறப்படும்,

கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் 75 லட்ச ரூபாய் செலவில் புதிய வடிவமைப்பு ரகங்கள் உருவாக்கப்படும்,

இந்நிறுவனத்தின் ஏற்றுமதியை அதிகரிக்க சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்பதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்பது உள்ளிட்ட புதிய அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

□□□□□□□□□

அன்பில் மகேஷ் பொய்யாமொழி

தமிழகத்தில் பள்ளிகளுக்கு புதிய கட்டிடம் கட்ட அரசு 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருப்பதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் இதை தெரிவித்த அவர், நடப்பாண்டில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் ஏற்படுத்தப்படும் என்றார்.

புதுக்கோட்டை ராணியார் மேல்நிலை பள்ளிக்கு, 8 வகுப்பறைகள் 2 கழிவறைகள் முன்னுரிமை அடிப்படையில் நபார்டு திட்டத்தின்கீழ் கட்டப்படும் என்றார்.

□□□□□□□□□

சேகர்பாபு

தமிழகத்தில் உள்ள ஆயிரத்து தொள்ளாயிரம் திருக்கோவில்களில் திருப்பணிகள் நிறைவடைந்து, வரும் செப்டம்பர் மாதத்திற்குள் குடமுழுக்கு நடைபெறும் என்று மாநில இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் இதனை தெரிவித்த அவர், பேராவூரணி தொகுதி திருச்சிற்றம்பலம் அருள்மிகு புராதன வனேஷ்வரர் திருக்கோவிலுக்கும் விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும் என்றார்.

□□□□□□□□□

கேள்வி நேரத்தின் போது வெளியான சில தகவல்கள்

பால் மற்றும் பால் உப பொருட்களை விற்பனை செய்வதற்கு முகவர்கள் முன்வந்தால் அவர்களுக்கு உடனடியாக அரசு அனுமதி வழங்கும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

ஜெயங்கொண்டம் தொகுதி அணைக்கரை பகுதியில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் முதலை பண்ணை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் மாநில வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

□□□□□□□□□

அஇஅதிமுக உண்ணாவிரதம்

கள்ளக்குறிச்சி வி‘ச்சாராய சம்பவம் தொடர்பாக ஆளும் திமுக அரசை கண்டித்து, அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையில் சென்னையில் இன்று கருப்பு சட்டை அணிந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பதவி விலக வேண்டுமென்று திரு. எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்தி உள்ளார்

இப்பிரச்சனை குறித்து சட்டப்பேரவையில் விவாதம் நடத்த முதலமைச்சர் தயங்குவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விஷச்சாராய சம்பவத்தில் உயிரிழப்பு 60-ஐ தாண்டியுள்ள நிலையில் இதுவரை அங்குள்ள மக்களை முதலமைச்சர் சந்திக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

□□□□□□□□□

ஆர்.என்.ரவி

வேலூரில் அமைந்துள்ள திருவள்ளுர் பல்கலைக்கழகத்தின் 18-வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வேந்தரும், ஆறுநருமான திரு. ஆர்.என்.ரவி தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 325 மாணாக்கருக்கு நேரடியாக பட்டங்களை அவர் வழங்கினார்.

இப்பல்கலைக்கழகத்தின் 79 உறுப்பு கல்லூரிகளை சேர்ந்த 43 ஆயிரத்து 735 மாணாக்கருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

□□□□□□□□□

அணைகள்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை காரணமாக நெல்லை மணிமுத்தாறு, தேனி சுருளி, கன்னியாகுமரி திற்பரப்பு அருவிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சுற்றுலா பயணிகள் இப்பகுதிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையிலிருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், கோதையாறு மற்றும் தாமிரபரணி ஆற்றங்கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து குறைந்ததை அடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□□

கிரிக்கெட்

உலககோப்பை 20-20 கிரிக்கெட் அரையிறுதியில் கயானாவில் இன்றிரவு 8 மணிக்கு இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி நாளைமறுநாள் பார்படாஸில் நடைபெறும் இறுதியாட்டத்தில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்ளும்.